## முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டச் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வு

### வினாத்தாள் - தமிழ்

51. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துகள் எத்தனை?
    A) மூன்று B) ஏழு C) பத்து D) முப்பது
52. ”இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்” எனக் குறிப்பிடும் நூல் எது?
    A) திவாகர நிகண்டு B) பிங்கல நிகண்டு C) நன்னூல் D) முத்துவீரியம்
53. சிலப்பதிகாரம் குறிப்பிடும் இலங்கை மன்னன்?
    A) வீரசோழன் B) வீரகேசரி C) கயவாகு D) கயமனார்
54. குறுந்தொகையைத் தொகுப்பித்தவர் யார்?
    A) மணக்குடவர் B) உ.வே.சாமிநாதய்யர் C) தெரியவில்லை D) பூரிக்கோ
55. சங்க இலக்கிய நெறியில் தோழி என்பவள் ..............................
    A) நற்றாயின் மகள் B) செவிலியின் மகள் C) அயற்பெண்டிர் D) அலர்ப் பெண்டிர்
56. மதுரைக்காஞ்சியின் ஆசிரியர் யார்?
    A) மருதநிலநாகனார் B) மாங்குடி மருதனார் C) கபிலர் D) நக்கீரர்
57. “காவிய காலம்” யாருடைய படைப்பு
    A) எஸ்.வையாபுரிப்பிள்ளை B) சி.வை.தாமோதரம் பிள்ளை C) தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை D) காரல் மார்க்ஸ்
58. ‘தமிழி“ என்பது எதைக் குறிக்கிறது
    A) தமிழின் பழைய எழுத்து வடிவம் B) தமிழ்ப்புலவர் C) தமிழ் மொழிபெயர்ப்பு D) தமிழ் மொழியாக்கம்
59. கல்வெட்டுகளில் குறிக்கப்படும் அன்னபலி என்பது எதைக் குறிக்கிறது?
    A) அன்னத்தைப் பலியிடுதல் B) சோற்றுப் பலி C) பலிச்சொல் D) அலர் மொழி
60. பிக்டோ கிராப் (Pictograph) என்றழைக்கப்படும் எழுத்து முறை எது?
    A) உருவ எழுத்து B) ஒலியெழுத்து C) கருத்தெழுத்து D) சுருக்கெழுத்து

61. “திருமந்திர ஓலை“ என்பது எதைக் குறிக்கிறது?
    A) ஓலையில் எழுதுபவர் B) ஓலை வாசிப்பவர் C) ஓலை நறுக்குபவர் D) ஓலை படியெடுப்பவர்
62. முதல் விருத்தக்காப்பியம் என்றழைக்கப்படுவது?
    A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம் C) சீவகசிந்தாமணி D) பெரியபுராணம்

63. கருணாமிர்த சாகரத்தை இயற்றியர் யார்?

A) கம்பர் B) புகழேந்திப் புலவர் C) ஒட்டக்கூத்தர் D) தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

64. சுல்தான் அப்துல் காதிறு என்பவர் யார்?

A) சேகனாப்புலவர் B) காசிம் புலவர் C) குணங்குடி மஸ்தான் சாகிபு D) உமறுபுலவர்

65. கம்பாரேட்டிவ் கிரட்டிசிசம் (Comparative Criticism) என்பது

A) ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு B) விளக்கமுறைத் திறனாய்வு C) மரபுவழித் திறனாய்வு D) படைப்பு வழித் திறனாய்வு

66. வின்சென்டர் கற்பனையை எத்தனை வகையாகப் பிரிக்கிறார்?

A) மூன்று B) ஏழு C) பத்து D) நான்கு

67. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது ............................ ஆகும்.

A) வினைத்தொகை B) வேற்றுமை C) உவமை D) உருவகம்

68. “காவியா தரிசம்“ என்ற நூலைப் பின்பற்றி எழுந்த நூல் எது?

A) மாறனலங்காரம் B) களவியற் காரிகை C) தண்டியலங்காரம் D) அகப்பொருள் விளக்கம்

69. இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலத்தை எவ்வாறு அழைப்பர்?

A) பக்தி இலக்கியக் காலம் B) சிற்றிலக்கியக் காலம் C) மறுமலர்ச்சிக் காலம் D) நவீனக்காலம்

70. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய தூது நூல் எது?

A) கிள்ளைவிடு தூது B) கழுதைவிடு தூது C) நெஞ்சுவிடு தூது D) விறலிவிடு தூது

71. ”இராசாக் கோவை” என்று அழைக்கப்படும் கோவை நூல் எது?

A) பாண்டிக்கோவை B) திருக்கோவையார் C) தஞ்சைவாணன் கோவை D) ஒருதுறைக் கோவை

72. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று அழைக்கப்படக் கூடியவா் யார்?

A) மறைமலையடிகள் B) அரசன் சண்முகனார் C) காரைக்கால் அம்மையார் D) உ..வே.சாமிநாதய்யர்

73. சிலப்பதிகாரத்தில் உள்ள மொத்தக் காதைகள் எத்தனை?

A) முப்பது B) மூன்று C) பத்து D) இருபது

74. ” இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைய நூலாகும்” - இதில் உள்ள புடை நூல் என்பது எது?

A) முதல் நூல் B) வழி நூல் C) சார்பு நூல் D) புனைவு நூல்

75. அடிவகைகளுள் “நேரடி“ என்பது எது?

A) நாற்சீரடி B) முச்சீரடி C) இருசீரடி D) அளவற்றது.

76. இடைநிலைப் பாட்டு என்பது எதைக் குறிக்கிறது?

A) தாழிசை B) வண்ணம் C) பண்பு D) நாட்டுப்புறப் பாட்டு

77. ஏட்டில் எழுதாக் கவிதை என்பது

A) காவியம் B) கதை C) புனைவு D) நாட்டுப்புறப் பாட்டு

78. ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி நினைத்த நூல் எது?

A) சிந்தாமணி B) சிலப்பதிகாரம் C) வளையாபதி D) குண்டலகேசி

79. நீலகேசியின் வேறு பெயர் என்ன?

A) நீலம் B) நீலகேசித் தொகுப்பு C) நீலகேசித்தெருட்டு D) நீலமலர்

80. ஆண்டாள் முல்லைப்பிராட்டி என்றழைத்தது?

A) சோலை மலர்கள் B) திருமால் C) திருத்துழாய் D) சங்கு

81. நம்மாழ்வாரைத் தெய்வமாக வணங்கியவர் யார்?

A) மதுரகவியாழ்வார் B) திருமங்கையாழ்வார் C) நம்மாழ்வார் D) ஆண்டாள்

82. சைவசித்தாந்த சாத்திரங்கள் எத்தனை வகைப்படும்?

A) பத்து B)ஒன்பது C) பதினான்கு D) எட்டு

83. சிறப்புநிலையில் **உரையாசிரியர்** என்றழைக்கப்படக் கூடியவர்?

A) நச்சினார்க்கினியர் B) பேராசிரியர் C) இளம்பூரணர் D) தெய்வச்சிலையார்

84. வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த உரையாசிரியர் யார்?

A) சேனாவரையர் B) இளம்பூரணர் C) நச்சினார்க்கினியர் D) மயிலைநாதர்

85. மணிப்பிரவாளநடையில் இடம்பெறும் மொழிகள் என்பது?

A) தமிழ் - வடமொழி B) தமிழ் - ஆங்கிலம் C) தமிழ் - தெலுங்கு D) தமிழ் - மலையாளம்

86. தமிழ் நாடகப் பேராசிரியர் என்று போற்றப்படக் கூடியவர் யார்?

A) பம்மல் சம்மந்த முதலியார் B) வீரபாகுச் செட்டியார் C) சங்கரதாஸ் சுவாமிகள் D) வீரமாமுனிவர்

87. சீறாப் புராணத்தில் உள்ள காண்டங்கள் எத்தனை?

A) 30 B) 92 C) 7 D) 3

88. இரகுவம்சத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

A) அரசகேசரி B) வீரகேசரி C) கயமனார் D) கல்லாடர்

89. யாழ்நூலை இயற்றியவர்

A) இராமலிங்கர் B) சுவாமி விபுலானந்தர் C) அரவிந்தர் D) தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

90. இராவண காவியம் பாடியவர் யார்?

A) புலவர் குழந்தை B) புகழேந்திப்புலவர் C) ஒட்டக்கூத்தர் D)இராமாநுசக் கவிராயர்

91. "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிர்க்கெல்லாம்" என்று சமுதாயம் பாடிய புலவர்?
   A) பாரதியார் B) பாரதிதாசன் C) சுரதா D) நாமக்கல் கவிஞர்
92. "மலரும் உள்ளம்" எனும் குழந்தை இலக்கியம் பாடியவர்
   A) அழ. வள்ளியப்பா B) ஆறுமுக நாவலர் C) குழ.கதிரேசன் D) வ.செ. குழந்தைசாமி
93. முதுமொழிக் காஞ்சி யாரால் பாடப்பட்டது?
   A) மதுரைக் கூடலூர்க்கிழார் B) சேக்கிழார் C) மருதனிள நாகனார் D) நக்கீரனார்
94. துரை மாணிக்கம் எனும் இயற்பெயருடையார் யார்?
   A) பெருஞ்சித்திரனார் B) மறைமலையடிகள் C) சூரிய நாராயண சாஸ்திரியார் D) தனிநாயக அடிகளார்.
95. 2018 இல் சாகித்திய அகாதமி விருது பெற்றவர்
   A) எஸ்.ராமகிருஷ்ணன் B) இன்குலாப் C) வண்ணதாசன் D) பூமணி
96. பித்தா பிறைசூடி… என்று இறைவனைப் பாடியவர்
   A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர் C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்
97. மருணீக்கியார் யார்?
   A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர் C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்
98. எருமையின் குழந்தைகள் என்றழைக்கப்படும் மலையின மக்கள் யார்?
   A) தோடர் B) இருளர் C) கோத்தர் D). படகர்
99. அரையுயிர் என்றழைக்கப்டும் எழுத்துகள் யாவை
   A) ய்.வ. B) அ ஆ C) ஒ ஓ D ) ஔ ஃ
100. தனிக்குறில் முன் வரும் ஒற்று உயிருடன் புணரும் போது எவ்வாறு மாற்றம் பெறும்?

கெடும் B) தோன்றும் C) இரட்டிக்கும் D) மிகும்.

முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டச் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வு

தமிழ் - விடைக் குறிப்புகள்

| வினா எண் | விடைக் குறிப்பு |
|---|---|
| 51. | A |
| 52. | B |
| 53. | C |
| 54. | D |
| 55. | D |
| 56. | B |
| 57. | A |
| 58. | A |
| 59. | B |
| 60. | A |
| 61. | A |
| 62. | C |
| 63. | D |
| 64. | C |
| 65. | A |
| 66. | A |
| 67. | D |
| 68. | C |
| 69. | B |
| 70. | C |
| 71. | B |
| 72. | A |
| 73. | A |
| 74. | C |
| 75. | A |
| 76. | A |

| | |
|---|---|
| 77. | D |
| 78. | C |
| 79. | C |
| 80. | A |
| 81. | A |
| 82. | C |
| 83. | C |
| 84. | A |
| 85. | A |
| 86. | A |
| 87. | D |
| 88. | A |
| 89. | B |
| 90. | A |
| 91. | A |
| 92. | A |
| 93. | A |
| 94. | A |
| 95. | A |
| 96. | C |
| 97. | B |
| 98. | A |
| 99. | A |
| 100. | C |